நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 68/2020**

**P.W.1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பரசுராமமூர்த்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | சுந்தரம் |
| கிராமம் | : | ஊத்தங்கரை |
| வட்டம் | : | ஊத்தங்கரை |
| மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 47 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 16–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.51 PM )

1. நான் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட புகாரினை வனஉயிரின பாதுகாப்பு சட்டம்,பிரிவு 55 ன் கீழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரிவு 55 ன் கீழ் வழக்கு

தாக்கல் செய்ய எனக்கு எவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று நான் தாக்கல் செய்துள்ள புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கில் புகார் தாக்கல் செய்வதற்கு எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றுள்ளேன். நான் சொன்னவாறு அனுமதி பெற்றிருந்தால் அதற்கான C படிவத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை இந்த வழக்கை நடத்துவதற்கு C படிவம் பெறவில்லை என்றால் சரியல்ல. வாங்கியிருந்தேன் அது என்னுடைய வழக்குகோப்பில் இல்லை. தேடிபார்த்து மீண்டும் தாக்கல் செய்கிறேன்.

3. நான் அவ்வாறு C படிவம் பெறவில்லை என்றாலும், பின்னிட்டு தாக்கல் செய்வதற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 14.12.2019 ம் தேதி காலை 09.00 மணி சுமாருக்கு சென்றேன். சம்பவயிடம் ஒதுக்குபுறமான காப்புகாட்டை ஒட்டியபகுதி என்றால் சரியல்ல. அந்த இடத்திற்கு செல்ல சாலை வசதி இல்லையென்றால் சரிதான். நடந்துதான் அந்த இடத்திற்கு சென்றோம்.

4. நான் சம்பவயிடத்திற்கு போகும் முன்பாக வனத்துறையை சேர்ந்த வனவர் சுந்தர்ராஜன், வனக்காப்பாளர் பத்ரன், வனப்பணியாளர்கள் இருந்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு சென்ற பிறகுதான் கிராம நிர்வாக அலுவலரும், கால்நடை மருத்துவரும் அங்கு வந்தார்களா என்றால் எனக்கு நினைவில்லை.

5. நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்க்கும்போது யானையின் எந்த பகுதியில் எரிந்த காயம் இருந்தது என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. நாக்கு பகுதியில் இருந்தது என்று நினைக்கிறேன். நான் சொன்னவாறு சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அந்த யானையை நான் பார்க்கவில்லை என்றாலும், அவ்வாறு பார்த்திருந்தால் அதற்கு ஏற்பட்ட காயங்களை சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

6. நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது மரக்குச்சிகள் மற்றும் மின்வேலி எதுவும் இல்லையென்றால் சரிதான். ஆனால் அதற்கான தடயம் இருந்தது. குச்சி ஊன்றியதற்கான குழிகள் இருந்தது. நான் பதிவுசெய்த வாக்குமூலங்களிலும், ஆவணங்களிலும் குறிப்பாக எந்த இடத்தில் குச்சிகள் நடப்பட்டிருந்ததற்கான

குழிகள் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் நான் சொன்னவாறு குழிகள் எந்தெந்த இடத்தில் தோண்டப்பட்டிருந்தது, எவ்வளவு இடைவெளியில் இருந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இடங்களை குறிப்பாக குறிப்பிடவில்லை. ஆனால் எத்தனை குச்சிகள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

8. தோட்டத்தில் மின்இணைப்பு கொடுக்கப்பட்டிருந்த இடத்திற்கும், யானை இறந்துகிடந்த இடத்திற்கும் குறிப்பாக எவ்வளவு தூரம் என்று நான் ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த கம்பிகள் தொடும் அளவிற்குத்தான் இடைவெளிகள் இருந்தது. நான் கைப்பற்றிய கட்டுக்கம்பியின் நீளம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. ஆனால் 5 கிலோ எடை இருந்திருக்கும்.

9. நான் சொன்னவாறு மரக்குச்சிகளோ, கம்பிகளோ சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், கடையில் கம்பிகளை வாங்கி சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அரசு புறம்போக்கு இடம் என்றால் சரிதான். அதற்கான வருவாய்த்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

10. வருவாய்த்துறை ஆவணங்களை நான் படித்து பார்த்தேன். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ 11 ஆவணத்தில் சர்வே எண்.440 இல் ஆறு மற்றும் 2 கிணறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தே சர்வே எண் எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். அதனை ஆக்கரமிப்பு என்று சொல்லி வருவாய்துறையினர் சான்று கொடுத்துள்ளனர்.

11. மேற்படி கொடுக்கப்பட்ட அசா.ஆ.10 கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழில் யானை மர்மமான முறையில் இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மின்சார வாரிய உதவி பொறியாளர் கொடுத்த அ.சா.ஆ.9 சான்றிதழில் எந்த எண் கொண்ட மின்இணைப்பிலிருந்து மின்சாரம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இணைப்பு எண்ணை குறிப்பிட்டுள்ளார், ஆனால் அதிலிருந்து மின்சாரம் கொடுக்கப்பட்டதாகவும், அதற்கான தடயங்கள்

இருந்ததாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

12. அந்த மின்இணைப்பிலிருந்து சட்ட விரோதமாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டு மின்வேலி அமைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் மின்சாரம் தாக்கி யானை இறந்ததாக சொல்லியுள்ளார். எதிரியின் பெயரிலுள்ள மின்சார இணைப்பு அவரது சொந்த பட்டா நிலத்தில் உள்ளதென்றால் சரிதான்.

13. அ.சா.ஆ.11 ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட 2 கிணறுகளுக்கு மின்இணைப்பு உள்ளதா என்று எந்த ஆவணங்களிலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த அரசு புறம்போக்கு இடத்தில் யாருக்கு விவசாயம் செய்ய அனுமதி வழங்கபட்டுள்ளது என்ற விவரத்தை நான் குறிப்படவில்லை என்றால் சரியல்ல. அது ஆக்கிரமிப்பு என்று சான்று வழங்கியுள்ளார்கள்.

14. நான் எதிரி மேற்படி புறம்போக்கு நிலத்தில் 10 சென்டை ஆக்கிரமித்து மக்காசோளம் பயிர் செய்திருந்ததாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 ஆவணத்திற்கு இந்திய சாட்சிய சட்டம் 65B ன் கீழ் சான்று எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சுயசான்றிட்டு தாக்கல் செய்துள்ளேன்.

15. கூகுல் மேப்பில் குறியீடு செய்யும் இடம் நாம் எந்த இடத்தில் நிற்கிறோமோ அந்த இடத்தை காட்டும் என்றால் சரியல்ல. மேற்படி அ.சா.ஆ.3 ஆவணம் சரியாக யானை இறந்த இடத்திலிருந்து குறியீடு செய்யப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் எந்த போனிலிருந்து எடுக்கப்பட்டது, எந்த கணினியில் அச்சிடப்பட்டது, எப்போது அச்சிடப்பட்டது உள்ளிட்ட விவரங்கள் அந்த ஆவணத்தில் இல்லையென்றால் சரிதான்.

16. அ.சா.ஆ.4 ஆவணத்திலுள்ள புகைப்படங்கள் யாரால் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எடுக்கப்பட்டது, எங்கு வைத்து அச்சிடப்பட்டது, எந்த இயந்திரத்தில் அச்சிடப்பட்டது உள்ளிட்ட விவரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

17. மேற்படி புகைப்படங்களை ஒரேபக்கத்தில் சேர்த்து அதில் வழக்கு விவரங்களை தட்டச்சு செய்தது யார் என்று இந்த வழக்கில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வனக்காப்பாளர் சவுண்டப்பன் என்பவர்தான் தயார் செய்தார்.

சவுண்டப்பன் தான் தயார் செய்தார் என்பதற்கான எந்த ஆவணமும் நான் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ–4 ஆவணத்தில் புகைப்படங்கள் மார்ப்பிங் மற்றும் எடிட்டிங் செய்யப்பட்டு வழக்கிற்கு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

18. அ.சா.ஆ.4 ஆவணத்தில் யானையின் ஒரு பாகத்தை கையால் எடுத்துக்காட்டி புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் புகைப்படத்தில் காட்டப்படும் பகுதி யானையின் பாகம் இல்லை என்றாலும், மார்ப்பிங் செய்யப்பட்டு அந்த புகைப்படத்தில் அந்த பாகம் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

19. நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து மேற்படி புகைப்படங்கள் எடுக்கப்படவில்லை என்றாலும், அதனால்தான் அதற்கான இந்திய சாட்சிய சட்டம் 65B ன் கீழான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

20. மேற்படி புகைப்படங்கள் அடங்கிய CD தான் அ.சா.ஆ.5 ஆவணம் என்றால் சரிதான். அ.சா.ஆ.3,4,5 ஆகிய ஆவணங்கள் உண்மையாக சம்பவயிடத்திலிருந்து எடுக்கப்பட்டது அல்ல என்பதாலும், அதற்கான இந்திய சாட்சி சட்டம் 65B ன் கீழான சான்றிதழ் தாக்கல் செய்யப்படாததாலும், அதனை ஒரு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

21. சம்பவயிடத்தில் வனத்துறையை சேர்ந்தவர்கள் தவிர தனிப்பட்ட நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த கிராமத்தை சேர்ந்தவர்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் யார் விவசாயம் செய்து வந்தார்கள் என்று தனிப்பட்ட பொதுமக்கள் சாட்சிகள் யாரேயும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

22. இந்த வழக்கில் தயார் செய்யப்பட்ட அ.சா.ஆ.1 மகசர் அறிக்கை, மற்றும் அ.சா.ஆ.2 படிவம் 95, H நமுனா ஆகிய ஆவணங்களில் பொதுமக்கள் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்டதாக சொல்லும் சான்றுபொருட்களான குச்சிகள் மற்றும் கம்பிகள் உண்மையில் சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றப்படாததால்தான் மேற்படி ஆவணங்களில் பொதுமக்கள் சாட்சி கையொப்பம் பெறப்படவில்லை என்றால்

சரியல்ல.

23. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ. 6 மற்றும் 8 ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்யப்படுவதற்கு முன்பாகவே சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே சான்றுப்பொருட்களை தயார் செய்துக்கொண்டு, எதிரியை மிரட்டி வெற்றுதாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டு அதற்கேற்றவாறு ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

24. எதிரி என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி தன்னிச்சையாக வாக்குமூலம் கொடுத்திருந்தால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அல்லது தனிப்பட்ட பொதுமக்கள் சாட்சிகள் முன்பாக நான் வாக்குமூலம் பதிவுசெய்திருப்பேன் என்றால் சரியல்ல.

25. நான் மிரட்டி வெற்றுதாளில் கையெழுத்து வாங்கி பின்னிட்டு ஒப்புதல் வாக்குமூலமாக தயார் செய்த காரணத்தினால் தான் வனத்துறையை சேர்ந்த நபர்களிடம் மட்டும் நான் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 13.12.2019 ம் தேதி இரவு கடும் மழைப்பொழிவு சம்பவயிடத்தில் இருந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் 14.12.2019 ம் தேதிதான் சம்பவயிடத்திற்கு சென்றேன். நான் சென்றயிடத்தில் நிலம் ஈரமாகவும், சேரும் சகதியாகவும் இருந்தது என்றால் சரியல்ல.

26. யானை மழைப்பொழிவின்போது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளது என்றாலும், மின்சாரம் தாக்கி இறக்கவில்லை என்றாலும் சரியல்ல. மின்கம்பிவேலி எவ்வளவு உயரத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பது பற்றி நான் குறிப்பிடாததாலும், யானையின் உடம்பில் எந்த பகுதியில் மின்சாரம் தாக்கியது பற்றி நான் குறிப்பிடாததாலும், மின்சாரம் பாய்ந்து யானை இறந்ததற்கான எந்த சாத்தியக்கூறுகளையும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தும்பிக்கையில் மின்சாரம் தாக்கப்பட்டு இறந்ததாக புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. நான் சொன்னவாறு தும்பிக்கையில் எந்த காயமும் இல்லை என்றால் சரியல்ல.

27. நான் யாரையும் சரிவர விசாரணை செய்யாமல், அவசரகதியில் ஒரு பொய்யான

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அரசு புறம்போக்கு நிலத்திற்கு அருகில் எதிரியின் விவசாய நிலம் உள்ளதென்று ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஸ்தல மகசர் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன். கிராம நிர்வாக அலுவரிடம் பட்டா, சிட்டா, அனுபவ சான்று, புலவரைப்படம் ஆகியவற்றை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துகிடந்த இடம் அரசு புறம்போக்கு என்று சான்றுக்கொடுத்துள்ளார்.

28. எதிரியால் நான் சொன்ன நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மக்காசோளம் பயிர் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் பட்டா நிலத்தில் இருந்த மின்இணைப்பிலிருந்து நான் சொன்னவாறு சட்டவிரோதமாக மின்சாரம் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. அந்த நிலத்தில் உண்மையில் மக்காசோளம் பயிரிட்ட நபரை இந்த வழக்கிலிருந்து தப்புவிக்கும் எண்ணத்தில் எதிரி மீது தவறான வழக்கு தாக்கல்செய்து, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(02.00 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.68/2020**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுந்தர்ராசு |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுகவுண்டர் |
| கிராமம் | : | தாண்டானூர், பெரியேரிப்பட்டி கிராமம் |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 62 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 16–ம்ஆம் தேதி*** பதிவு *செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.30 PM

1. குறிப்பாக எந்த நபர் சம்பவம் குறித்து எனக்கு தகவல் கொடுத்து நான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்று குறிப்பாக சொல்லமுடியாது.

பெரும்பான்மையான பொதுமக்களிடம் எனது செல்போன் எண் இருக்கும். யானை பர்கூர் காப்புகாடு பகுதியிலிருந்துதான் வந்தது என்று அதன் கால்தடத்தை வைத்து கண்டுபிடித்தேன். நான் சொல்லும் காப்புகாடு சம்பவயிடத்திற்கு 500 மீட்டர் தொலைவில் உள்ளது.

2. நான் சம்பவயிடத்திற்கு போகும்போது அந்த இடத்தில் மின்சார இணைப்போ, கம்பிகளோ இல்லையென்றால் சரிதான். போனபிறகு தேடி புதர் மறைவிலிருந்து கண்டுபிடித்தோம். நான் சொன்னவாறு புதர் மறைவிலிருந்து குச்சிகளோ, கம்பிகளோ எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புதர் மறைவிலிருந்து குச்சிகளையும், கம்பிகளையும் எடுக்கும்போது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரியின் அனுபவத்தில் உள்ள விவசாய புறம்போக்கு இடம். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், எதிரிக்கும் அந்த நிலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. அந்த புறம்போக்கு நிலத்திற்கு பக்கத்தில் எதிரிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.445 புறம்போக்கு நிலம் 440 ம் இரண்டையும் சேர்த்து ஒன்றாக எதிரி மக்காசோளம் பயிரிட்டிருந்தார்.

4. நான் தயார் செய்த ஸ்தல மகசரில் மேற்படி நிலம் எதிரிக்கு பாத்தியப்பட்டது என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி நிலம் பாத்தியப்பட்டது குறித்து முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 445 நிலத்திற்கும், சர்வே எண்.440 நிலத்திற்கும் இடையே ஓடை உள்ளதென்றால் சரியல்ல. ஓடைக்கு தெற்குபக்கம் புறம்போக்கு நிலம் உள்ளது. அதனையொட்டி மேற்படி சர்வே எண். 440 பட்டா நிலம் உள்ளது.

5. சர்வே எண். 440 ல் அரசு ஓடை புறம்போக்கில் எதிரி மக்காசோளம் பயிரிட்டிருந்ததாக எந்தவொரு முகாந்திரமும் இல்லாமல் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முந்தைய நாள் 13.12.2019 ம் தேதி அந்த பகுதியில் மழைபொழிவு இருந்ததென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தலைமை அலுவலகம் அந்த இடத்திலிருந்து 11 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நான் அங்கு தங்கியிருந்ததால் அன்று மழைபெய்ததா என்று எனக்கு தெரியாது.

6. சம்பவயிடத்திலிருந்த கம்பியின் நீளம் மற்றும் மின்இணைப்பிலிருந்து சம்பவயிடம் எவ்வளவு தூரம் என்பது குறித்து எந்த விவரங்களையும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். கம்பி சுற்றப்பட்ட நிலையில் இருந்தது. எதிரியின் கிணற்றுக்கான மின்இணைப்பிலிருந்து மின்சாரம் எடுக்கப்படாததால் தான் என்னால் மேற்படி விவரங்களை கொடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல.

7. இந்த வழக்கில் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் எதிரிதான் குற்றம் செய்யததாக முன்முடிவு செய்துக்கொண்டோம் என்றாலும், அதற்கு தகுந்தார்போல் புலன்விசாரணையை நாங்கள் ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும் சரியல்ல. எதிரியின் இடத்தில்தான் சம்பவம் நடைபெற்றது. அந்த இடத்தில் வேறுயாரும் சென்று அதை செய்யமுடியாது.

8. எதிரி நிலத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அரசு புறம்போக்கு நிலத்தில்தான் சம்பவம் நடைபெற்றது என்றாலும், அதுதொடர்பாக உரிய அரசு அதிகாரிகளை விசாரணை செய்யாமலும், உரிய ஆவணங்களை பெற்று தாக்கல் செய்யாமலும், எதிரியின் மீது தவறாக குற்றம் சுமத்துகிறோம் என்றால் சரியல்ல.

9. நான் சொன்ன சர்வே எண். 440 இரண்டு கிணறுகள் தனியாக உள்ளதென்றாலும், அந்த கிணற்றில் கிணற்று பாசனத்தை வைத்து தனியாக விவசாயம் நடைபெற்று வந்ததென்றாலும், அது சம்மந்தப்பட்ட நபரை தப்புவிக்கும் எண்ணத்தில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் சரியல்ல. பட்டா நிலத்தில் இருந்து மின்சாரம் எடுத்துதான் மின்வேலி அமைத்திருந்தார்கள்.

10. பட்டாநிலத்திலிருந்து எந்த மின்சாரமும் எடுக்கப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புறம்போக்கு நிலத்தில் உள்ள நிலத்திற்கு மின்சாரம் இணைப்பு தரமாட்டார்கள். நான் அனுமானத்தின் அடிப்படையில் அவ்வாறு தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. மேற்படி சர்வே எண்.440 ல் உள்ள 2 கிணறுகள் இருப்பதாகவோ, அந்த கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருந்ததாகவோ எந்த ஆய்வும் நாங்கள் செய்யவில்லை என்றால் சரியல்ல. பெரியதண்டாவிற்கும்

சம்பவயிடத்திற்கும் இடையே சுமார் ¾ கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எளிதாக நடந்து வந்துவிடலாம் என்றால் சரிதான். நான் போகும்போது சம்பவயிடத்தில் நிறைய பொதுமக்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

12. நான் தயார் செய்த ஸ்தல மகசரில் பொதுமக்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் H நமுனா மற்றும் படிவம் 95 ஆகிய ஆவணங்களில் பொதுமக்கள் சாட்சிகள் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக வனத்துறை பொதுமக்களிடம் சாட்சி கையெழுத்து வாங்குவதில்லை.

13. வனஉயிரின பாதுகாப்பு சட்டத்தில் கட்டாயம் பொதுமக்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கவேண்டும் என்று குறிப்பிடவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து படிவம் 95, ஸ்தல மகசர், H நமுனா ஆகிய ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்பதால் தான் அங்கிருந்த பொதுமக்களிடம் சாட்சி கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

14. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் பதிவுசெய்தேன். அந்த ஆவணத்தில் வனச்சரகர் கையெழுத்து பக்கத்திலும், பத்ரன் என்பவர் கையெழுத்து கீழும் தேதி 16.12.2019 ம் தேதி என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் கைதவறுதலாக திருத்தப்பட்டுள்ளது. இரண்டு இடங்களில் கைதவறுதலாக தேதி திருத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இரண்டு இடங்களிலும் 14.12.2019 ம் தேதியென்று கையொப்பம் பெறப்பட்டு 16.12.2019 ம் தேதி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. எதிரியை 14.12.2019 ம்தேதியே மிரட்டி வெள்ளை பேப்பரில் எதிரியிடமும், மேற்படி நபர்களிடமும் கையெழுத்து வாங்கி கொண்டோம் என்றாலும், அதன்பிறகு தேதி திருத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரி சரணடைந்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் மேற்படி எதிரியை மிரட்டி அவர் கையெழுத்து போட்டுக்கொடுத்த வெள்ளை பேப்பரை வைத்து நானாக ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

16. எதிரி தன்னிச்சையாக சரணடைந்து தன்னிச்சையாக வாக்குமூலம் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 14.12.2019 ம்

தேதி சொன்ன நேரத்தில் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் சம்பவயிடத்தில் ஆய்வுசெய்து உண்மை குற்றவாளிகள் யார் என்று கண்டறிய நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.445 விவசாய நிலத்தில் எதிரிக்கு வீடு எதுவும் இல்லை.

17. எதிரி குடியிருக்கும் கீமியான்காடு என்பது மேற்படி 445 சர்வே எண்ணுக்கு உட்பட்டது அல்ல என்றால் சரிதான். கீமியான்காடு என்பது சம்பவயிடத்திலிருந்து சுமார் 1 கிலோமீட்டருக்கு சற்று அதிகமான தூரத்தில் அமைந்துள்ளது.

18. மின்சார வாரியத்தினர் சம்பவயிடத்திற்கு வந்து கம்பி மற்றும் நடப்பட்டிருந்த கட்டைகளை பார்த்து கருத்துரை எழுத்துமூலமாக கொடுத்துள்ளார்கள். நான் சொல்வது போல், சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், மின்சார வாரியத்தினர் வந்து சான்று வழங்கவில்லை என்றாலும் அது எதிரியின் அனுபவத்திலுள்ள நிலம் என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கவில்லை என்றாலும் சரியல்ல.

19. சம்பவயிடத்திற்கு நாங்கள் வந்தபிறகுதான் கிராம நிர்வாக அலுவலர் அங்கு வந்தார். கிராம நிர்வாக அலுவலர் அங்கு வருவதற்கு முன்பாகவே அவருக்கு யானை எவ்வாறு இறந்தது என்று தெரியும் என்றால் சரிதான். ஆனால் யானை மர்மமான முறையில் உயிரிழந்ததாக கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளார் என்றால் நான் அதை பார்க்கவில்லை. நான் முதல் விசாரணையில் ஆதாரமற்ற மற்றும் முகாந்திரம் இல்லாத விஷயங்களை சொல்லியுள்ளேன்என்றால்சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(04.12 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.68/2020**

**P.W.3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பத்ரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அய்யாவு |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 16–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.14 PM)

1. அ.சா.ஆ.6 ஆவணத்தில் எனது கையெழுத்துக்கு கீழேயுள்ள தேதி 16.12.2019 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 16.12.2019 ம் தேதி எதிரி

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், நான் அதற்கு சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் தயார் செய்ததாக சொல்லப்படும் படிவம் 95 நான் சொன்னவாறு சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், எனது அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

2. மேட்டுர் வனச்சரகர் அலுவலத்திலிருந்து கணினியை சம்பவயிடத்திற்கு நாங்கள் எடுத்துச்செல்லவில்லை. படிவம் 95 கணினி மூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் 14.12.2019 ம் தேதி சம்பவயிடத்திலேயே வைத்து படிவம் 95 தயார் செய்யப்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

3. H நமுனாவும் நான் சொன்னவாறு சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. **( மேற்படி H நமுனா அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட தவறிவிட்டதால் நீதிமன்ற தரப்பு சான்று ஆவணம் எண்– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அவ்வாறே குறியீடு செய்யப்படாத பிடிபொருள் பட்டியல் ( படிவம் 95) நீதிமன்ற தரப்பு சான்று ஆவணம்–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

4. நான் மேற்படி ஆவணங்களை சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யாததால்தான் அங்கு வந்திருந்த பொதுமக்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் சாட்சி கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.நான் சம்பவயிடத்திற்கு தராசை எடுத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் தராசை வைத்து கம்பியை எடைப்போட்டிருக்க வாய்ப்பில்லை என்றாலும், கடையில் வாங்கியதால்தான் எடையை சரியாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. மீண்டும் அலுவலகத்திற்கு சென்று தராசை எடுத்துவந்து எடைபோட்டோம். வழக்கிற்காக பின்யோசனை செய்து மீண்டும் அலுவலகத்திற்கு சென்று தராசை எடுத்து வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. பிடிபொருள் மகசர் மற்றும் ஸ்தல மகசரில் மின்இணைப்பு கொடுக்கப்பட்ட

இடத்திலிருந்து சம்பவயிடம் எவ்வளவு தூரம், கம்பி எவ்வளவு நீளம் என்பது குறித்து எந்த விவரங்களையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு சென்று எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்றாலும், வனச்சரகத்தில் வைத்து மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு எந்தவித முகாந்திரங்களும் இல்லையென்றாலும் சரியல்ல.

6. எதிரி 16.12.2019 ம் தேதி சரணடைந்ததாக சொல்லும் விவரமும் வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. அந்த பகுதியில் சுமார் 1 வருடம் பணிபுரிந்தேன். தினசரி நான் பாராகாவலுக்கு அந்த பகுதிக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான்.

7. சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் புறம்போக்கு இடத்தில் 2 கிணறுகள் உள்ளதென்றால் சரிதான். அந்த இரண்டு கிணறுகளில் 1 கிணற்றுக்கு மின்சார இணைப்பு உள்ளது. புறம்போக்கிலுள்ள 2 கிணறுகளை யார் பயன்படுத்துகிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பொய்யான சாட்சியை முன்னிலைப்படுத்திகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(04.30 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**